[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்பரோரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) **திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு; இதனை பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு **விடப்படுகிறது.**

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11.15

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991-92 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991-92 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப் பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 31.58 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 25..11 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 6.47 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

1991-92 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு, சட்டமன்றப் பேரவையில் அண்மையில்தான் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. நிதியொதுக்கச் சட்ட முன் வடிவு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டு, இம் மாமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு விட்டபடியால், உடனடிச் செலவிற்கான சில இனங்களுக்குத் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தொகை அனுமதிக்கப்பட